***கவனிக்க.***-*2020.10.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2197 - 2020 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2020.10.09**
*2197 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 66 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2020,ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

65 - B 082066 - 353 (2020/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் பிசுக்கால் ஏல விற்பனை

கொழும்பு 10, டீ.பீ. ஜாயா மாவத்தையில் இல. 479 (முன்னர் இல. 48,) எனும் இடத்தில் பதிவு அலுவலகத்தை மற்றும் ஹொரணை, அங்குருவாதொட வீதி, இல. 153 எனும் இடத்தில் கிளை அலுவலகத்தை நடாத்திச் செல்லும் ஹற்றன் நெஷனல் பேன்க் பீ.எல்.சீ. (முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நெஷனல் வங்கி என அடையாளங் காணப்பட்டது)

வழக்கு இல. :சீ.எச்.சீ. (சிவில்) 44. 2012/ எம்.ஆர்
தன்மை: அடகு
வழக்கு நடைமுறை: சாதாரண
பெறுமதி: 4.6 மில்லியன் ரூபா
களுத்துறை மாவட்ட நீதிமன்றம்
எஸ்கிசி: இல.32/2020

*வழக்காளி*

*எதிர்*

1. மஹ அம்பலங்கொட பனியன்துவகே சுனில்

2. பொதாகொடகே தோன ஸ்ரீயானி ,

இல. 49/ டீ, பிடிவல வீதி,சவ்சிறி தோட்டம், கும்புக, கோனபொல.

புதிய முகவரி இருவரும்: இல.34, சுதெரிஸ் சில்வா மாவத்தை, ஹொரணை மற்றும்

இல.39/ஏ, சுதெரிஸ் சில்வா மாவத்தை, ஹொரணை.

எதிராளிகள்

மேற்குறிப்பிட்ட இலக்கம் கொண்ட வழக்கில் எனக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை அதிகாரப் பத்திரத்திற்கு அமைய வழக்காளி வங்கிக்கு மேற்குறிப்பிட்ட எதிராளியினால் செலுத்த வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ள ரூபா 4, 561,041.93 தொகை மற்றும் அதன் பொருட்டு 2011, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட முழுத்தொகையை செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 24% வீதம் வட்டியும், தீர்ப்புக் கட்டளை திகதி தொடக்கம் 02 மாதத்திற்குள் ரூபாய் 4,561,041.93 தொகை அளவு மற்றும் 2011, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் 24% வீதம் வட்டி மற்றும் முழுத்தொகையை செலுத்துவதற்கு தவறவிட்டுள்ள படியால் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள்.

***2020, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு எதிராளியினுடைய ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிஸ்கால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.***

குறித்த ஏல விற்பனையில் உயர்ந்தபட்சத்தை அடைந்தவர் கொள்வனவாளராவதுடன் ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேசக் கொள்வனாவாளர் விற்பனை விலையில் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் படி அரசாங்க கட்டணங்களும், விற்பனை தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரரின் தரகு பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அவ் வழக்குக்கு பற்றாக குறித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

**ஆதனம் அமைந்துள்ள இடத்திற்குச் செல்லும் வழி:** ஹொரணை, பொகுனுவிட தொடக்கம் கொழும்பு பாதையில் கும்புக சந்திக்கு வருகையில் இடதுபக்கமுள்ள இடதுபக்க கெலனிகம பாதையில் 300 மீற்றர் வரை முன்னோக்கி செல் கையில் வலது பக்கத்திலுள்ள பிடிவில பாதையில் 200 மீற்றர் வரை முன்னோக்கி செல்கையில் வலது பக்கத்தில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தின், றைகம் கோரளை, கும்புக்க பத்துவையில் ஹொரணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கஹன்வில உப அலுவலகத்தில், கும்புகே எனும் இடத்தில் அமைந்துள்ள "கஹடகஹவத்த" அல்லது "கஹடகஹகனத்த" எனும் காணியில் உத்தியோகபூர்வ நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க மூலம் அளந்து தயாரிக்கப்பட்ட 1996.11.26 ஆந் திகதி கொண்ட மற்றும் இல. 1144 கொண்ட வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இல. 18 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டிற்கு எல்லை: வடகிழக்கு: லொட் 26; தென் கிழக்கு: பிடிவல வீதி; தென் மேற்கு: வரைபட இல. 12 இற்கு உரிய லொட் 3 உம் மற்றும் வடமேற்கு: லொட் 19 மற்றும் 30 எல்லைகள் கொண்ட இல. 1144 எனும் வரைபடத்திற்கு அமைய பதின்மூன்று தசம் ஒன்பது மூன்று பேர்ச்(0ஏ.0றூ.13.93பே.) விசாலங் கொண்ட காணித்துண்டிற்குள் உள்ள கட்டிடங்கள் மற்றும் ஏனைய அனைத்தும் உட்பட, குறித்த காணித் துண்டிற்குள் உள்ள கட்டிடங்கள் மற்றும் ஏனைய அனைத்தும் உட்பட, குறித்த காணியானது ஹொரணை காணிப்பதிவகத்தி சீ. 172/ 269 எனும் பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது அட்டவணையின் விபரங்களான பாதை உரித்து தொடர்பாக C210/268 ஐ பார்க்கவும்.

பதிவாளர்/பிரதி பிசுக்கால்.
வர்த்தக மேல் நீதிமன்றம்,
கொழும்பு 12.

2020, செத்தெம்பர் 22.

10- 360